Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate, Tiruttani
CC.No. 395/2025

Deposition of Witness for : PW11

Name :-மதியரசன்

Father's Name :-ஞானசுந்தரம்

Village & Taluk :-

Caste : Calling :-காவல் ஆய்வாளர், மாகரல் காவல் நிலையம், காஞ்சிபுரம்

Religion : Age :58

Accused Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13/07/2026

**முதல் விசாரணை**

1. நான் தற்போது மாகரல் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.07.2025 ஆம் தேதியன்று நிலைய ஆஜரில் இருந்த போது திருத்தணி காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.கடிகாசலம் அவர்கள் திருத்தணி காவல் நிலைய குற்ற எண் 358/2025, பிரிவு 281, 125(a) BNS ன் படி 14.07.2025 ஆம் தேதியன்று வழக்கு பதிவு செய்து பின்பு 19.07.2025 ஆம் தேதியன்று 281, 125(a), 106(1) BNS ஆக பிரிவு மாற்றம் செய்து முதற் கட்ட விசாரணையை முடித்து வழக்கின் கோப்புகளை எனது பார்வைக்கு வைத்தார்.

2. நான் கோப்புகளை விசாரணைக்கு எடுத்து கொண்டு இவ்வழக்கின் புகார்தாரர் வனிதா என்பவரையும், சாட்சிகள் ராஜபாண்டியன், மணி, நாகராஜன், ஜெயபாலன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் இறந்து போன முருகேசன் என்பவரின் பிரேதமானது சென்னை இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு நேரில் சென்று சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தாக்கல் செய்தேன். **(அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் பிரேத விசாரணை சாட்சிகளான ரமேஷ், கோபால், ஜெயபால் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கில் விபத்திற்குள்ளான வாகனங்களான TN 22 CJ 8320 இரு சக்கர வாகனம் மற்றும் AP 03 AJ 5768 Swift car என்ற வாகனங்களை தணிக்கை செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ராஜசேகரன் என்பவரை விசாரணை செய்து அவர் வழங்கிய மோட்டார் வாகன ஆய்வறிக்கைகளை

பெற்றேன். பின்னர் இவ்வழக்கின் விபத்தில் காயமடைந்த முருகேசன் மற்றும் ராஜபாண்டியன் ஆகிய இருவருக்கும் விபத்து பதிவேடு பதிவு செய்து முதலுதவி சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி.கனிமொழி என்பவரை விசாரணை செய்து அவர் வழங்கிய விபத்து பதிவேடுகள் மற்றும் காயச்சான்றினை பெற்றேன்.

3. பின்னர் இவ்வழக்கின் விபத்தில் இறந்து போன முருகேசன் என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திரு.விக்னேஷ் என்பவரை விசாரணை செய்து அவர் வழங்கிய பிரேத பரிசோதனை சான்றினை பெற்றேன். **(அந்த பிரேத பரிசோதனை சான்று அ.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் இவ்வழக்கின் பிரேத பரிசோதனைக்கு அலுவல் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்த முதல் நிலை காவலர் திரு.முருகன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கின் இறுதி கட்ட புலன் விசாரணையை முடித்து நீதிமன்றத்திற்கு குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

13.07.2025 ஆம் தேதியன்று மதியம் 03.20 மணியளவில் நடந்த சம்பவ இடத்தை நேரடியாக ஆய்வு செய்யாமல் ஆவணங்களின் அடிப்படையில் தான் இறுதி அறிக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சிறப்பு உதவி ஆய்வாளர் பதிவு செய்த ஆவணங்களின் அடிப்படையிலும், என்னுடைய விசாரணையின் அடிப்படையிலும் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன். வரைபடத்தில் விபத்து ஏற்படுத்திய வாகனமும், விபத்திற்குள்ளான வாகனமும் காணப்படவில்லை என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் காயம்பட்ட இருவரும் குடிபோதையில் இருந்ததாக மருத்துவர் குறிப்பு எழுதியுள்ளார் என்றால் சரிதான். AP 03 AJ 5768 Swift car என்ற வாகனத்தை விபத்து நடந்து 2 நாட்கள் கழித்து மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தினேன் என்றால் சரிதான் அவ்வாறு ஏற்பட்ட கால தாமதத்திற்கு என்ன காரணம் என்றால் சம்மந்தப்பட்ட வாகனத்தின் உரிமையாளர் வாகனத்தின் பதிவேடு தாமதமாக ஆஜர் செய்ததால் 2 நாட்கள் கால தாமதம் ஆனது. மேற்படி தகவலை இவ்வழக்கு ஆவணத்தில் குறிப்பிட்டு உள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட இரு சக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வுக்கு 02.09.2025 ஆம் தேதியன்று 52 நாட்கள் கால தாமதமாக உட்படுத்தியுள்ளேன் என்றால் சரிதான் அதற்கான காரணத்தை இவ்வழக்கு ஆவணங்களில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி இரு சக்கர வானத்தின் ஆய்வறிக்கையில் வாகனத்திற்கு காப்பீடும், ஓட்டுநர் உரிமமும் முடிவடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சென்னை - திருப்பதி நெடுஞ்சாலை 6 வழிச்சாலையாக விரிவாக்கம் செய்யும் பணி நடைபெற்று வருவதால் அந்த சாலையில் வாகனங்கள் மெதுவாக தான் செல்லமுடியும் என்றால் வேலை நடக்ககூடிய இடத்தில் மெதுவாக தான் செல்லமுடியும். இரு சக்கர வாகனத்தில் பயணித்தவர்கள் குடிபோதையில் இருந்தார் என்றும் இரு சக்கர வாகனத்தை ஓட்டிய நபர்

அதிவேகமாக சென்று பள்ளகாலனி மெயின்ரோட்டில் விழுந்துவிட்டார் என்றும் வாகன விபத்து இழப்பீடு பெற வேண்டி எதிரியின் மீது பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை

Typed to my dictation in open court.
Read over to the witness and admitted
by the witness as correct.
Sd./K.Venkatesan
Judicial Magistrate,
Tiruttani